(ஓ) வக்பு (இசுலாமிய அறக் கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமன) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்பு (இசுலாமிய அறக்கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமன) சட்ட முன்வடிவு. மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்பு (இசுலாமிய அறக் கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமன) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 33-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம் அறிமுகம் செய்தல். அரசினர் தீர்மானத்தை பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும் "
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

7. அரசினர் தனித் தீர்மானம்.

இலங்கை அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட கச்சத் தீவையும் அதற்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதிகளையும் திரும்பப் பெறவும், இந்திய நாட்டின் கடற்கரை எல்லைப் பகுதியுடன் அவைகளை மீண்டும் சேர்க்கவும் எல்லாவிதமான உடனடி நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மைய அரசு மேற்கொள்ள வேண்டுமெனக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களின் முக்கிய பிரச்சினையாகிய கச்சத் தீவு குறித்த பொருள் பற்றி இன்று இப்பேரவையில் நான் ஒரு முக்கிய தீர்மானத்தை முன்மொழிய விழைகிறேன்.

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களையும் இப்பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பரம்பரை பரம்பரையாக ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் நமது அப்பாவி மீனவர்களுக்கு இந்திய கடலின் எல்லை இதுதான் என்று அவர்கள் வழக்கத்தில் அறிந்து உள்ளனரே அன்றி, அதனைத் திட்டவட்டமாக அவர்களின் பயணத்தின்பொழுது கோடிட்டுக் காட்டி உணர்த்த இயலாத நிலையிலேயே அவர்கள் உள்ளனர். இதனை எவரும் எதிர்பார்க்கவும் முடியாது. இவ்வகை